2003 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 355, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

355—

அண்ணா கலையரங்கம்

***23649—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரிலுள்ள அண்ணா கலையரங்கை இடித்துவிட்டு, பல்லடுக்கு மாளிகை கட்டி, கீழ்த்தளத்தில் அரங்கும் மற்ற தளங்களில் அலுவலகங்களையும் கட்டிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் அண்ணா கலையரங்கம் தற்போதுதான் ரூபாய் 10.00 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு திரையரங்கமாக நடத்தப்பட்டு வருவதால், இதனை இடித்துவிட்டு பல அடுக்கு மாளிகை கட்டி, கீழ்த்தளத்தில் அரங்கம் மற்றும் பிற தளங்களில் அலுவலகங்களைக் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் அண்ணா கலையரங்கம் இருக்கக்கூடிய பகுதி ஒரு Commercial Area. அந்த இடத்தில் இப்போது 10 இலட்சம் ரூபாய் செலவு செய்து இருக்கைகளை மட்டும் சரி செய்திருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, அந்த அண்ணா கலையரங்கம் முழுமையான புதுப் பொலிவு பெறவில்லை. ஆகவே அந்தக் கட்டடத்தை முழுமையாக எடுத்துவிட்டு, கீழ்த்தளத்தில் அரங்கத்தையும், மேல் தளத்தில் பல அலுவலகக் கட்டடங்கள் போன்றவற்றை எல்லாம் கட்டினால், அந்தத் துறைக்கும் வருவாய் வரும்; அந்த இடத்தில் அந்தக் கலையரங்கமும் கொஞ்சம் பொலிவோடு விளங்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டடத்தை முழுமையாக அப்புறப்படுத்திவிட்டு, புதியதாக பல அடுக்கு மாளிகைக் கட்டடத்தைக் கட்டுவதற்க்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 115, செய்தி மற்றும் விளம்பரத் துறை, 12-6-2000-ன்படி பொதுப் பணித் துறைக்கு ஒப்பளிப்பு செய்து, ரூபாய் 10 இலட்சத்தில் வேலூரில் அண்ணா கலையரங்கில் புதிய இருக்கைகளை அமைத்தல், பொய்க் கூரை அமைத்தல், புதிய திரைச் சீலை, புதிய மின் விசிறி மற்றும் விளக்குகள் அமைத்தல் மற்றும் புதிய வர்ணம் பூசுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட அண்ணா கலையரங்கினை திரையரங்கமாகவே தொடர்ந்து நடத்தச் செய்யலாம் என்றும், அரசு மற்றும் தனியார் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திரைப்படக் காட்சிகளை இரத்து செய்து நிகழ்ச்சிகளுக்கு அரங்கத்தினை ஒதுக்கீடு செய்யலாம் என்றும் மக்கள் பிரதிநிதிகளும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கூட்டம் நடத்தி, அரசுக்குப் பரிந்துரை செய்து அதன்படி 28-8-2001-ல் அரசு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. 19-11-2001-ல் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் திறந்து வைக்கப்பட்டு தொடர்ந்து திரையரங்கமாக நடத்தப்பட்டு வருகிறது. நிதி நெருக்கடியான சூழ்நிலையிலும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வேலூர் அண்ணா கலையரங்கத்தைச் சீரமைக்கும் பணிக்காக ரூ.10 இலட்சம் வழங்க அனுமதிக்கப்பட்டு இன்று புதுப்பிக்கப்பட்டு, அந்தக் கலையரங்கம் தொடர்ந்து திரையரங்கமாக நடைபெற்று வருவதால் நிதிநிலை சீரான பின்னர் மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை ஏற்பது குறித்து அரசு சிந்திக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . எங்களுடைய வேலூரில் சங்கீத சபா என்கிற ஒரு இடம் அரசுக்காக ஒதுக்கப்பட்டு, அங்கு கட்டடங்கள் எல்லாம் கட்டப்படாமல் சில நேரங்களில் சாராயக்கடையாகவும் இருந்து, பிறகு இன்று பயனற்றுக் கிடக்கிறது. எங்களுடைய வேலூரில் வேறு பொழுதுபோக்கு அம்சம் எதுவுமே இல்லாத ஒரு சூழ்நிலையில், இப்பொழுது சங்கீத சபா போன்ற அமைப்புகள், ஏதாவது கலை பண்பாட்டு நிறுவனங்கள், அந்த இடத்திலே ஒரு டிராமா நடத்துவதற்கோ, கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கோ அதிகமான கட்டணத்தைக் கொடுத்து கல்யாண மண்டபங்கள் எடுக்க வேண்டிய

2003 ஏப்ரல் 28]

நிலையில் இருக்கிறார்கள். நம்முடைய இந்த அண்ணா கலையரங்கத்திலும்கூட தொகை அதிகமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. குறைந்த கட்டணமாக, ஒரு நாளைக்கு ரூ.300/- வாடகை என்கிற வகையில், இந்தக் கலையை வளர்க்கின்ற முகத்தான் அங்கே கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு, பொது நிறுவனங்களுக்குக் கொடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கையை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 356, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

356—

சித்திரைப் பொருட்காட்சி

***36019—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில் பொழுதுபோக்கு வசதியில்லாமையால், 50 ஏக்கர் பரப்பளவில் மதுரை சித்திரைப் பொருட்காட்சியை நிரந்தரமாக அமைக்க இடம் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசாணை (நிலை) எண் 233, செய்தி மற்றும் சுற்றுலாத் (பொருட்காட்சி) துறை, நாள் 24-12-1996-ன்படி அரசுப் பொருட்காட்சி மதுரையில் ஆண்டுதோறும் ஏப்ரல்-ஜூன் திங்களில் 45 நாட்கள் நடைபெற்று வருகிறது. மதுரையில் சித்திரைப் பொருட்காட்சி, மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான தமுக்கம் மைதானத்தில், பொருட்காட்சியில் கிடைக்கும் நிகர வருவாயில் 50 சதவீதம் மதுரை மாநகராட்சிக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நடைபெற்று வருகிறது. எனவே 50 ஏக்கர் பரப்பளவில் மதுரை சித்திரைப் பொருட்காட்சியை நிரந்தரமாக